# கதைவழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 1
# ‘இன்பமான பிறந்தநாள்’

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் ஏற்கெனவே வாசித்த ‘இன்பமான பிறந்தநாள்’ என்னும் கதையையும் அக்கதையில் வரும் பிறந்தநாள் தொடர்பான சொற்களையும் நினைவுக்கூரச் செய்வதாலும் பின்னர், பிள்ளைகளைக் கதையில் வரும் சொற்களை அடையாளம் காணச் செய்வதாலும் அவர்கள் அச்சொற்களை நன்கு மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள்கள்:**

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**
   - ✓ புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **கதை பற்றிய புரிந்துணர்வை வெளிக்காட்டுதல்**
   - ✓ ஆசிரியர் கதையை வாசிக்கையில் சொற்களைச் சுட்டிக்காட்டுதல்; வாசித்துக் காட்டப்படும் கதைக்கு ஏற்ப முகபாவங்களைச் செய்தல்

**கற்றல் குறிக்கோள் 3: நம் பல்லினப் பண்பாட்டைத் தெரிந்துகொள்ளுதல்**

1. **பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் தெரிந்துகொள்ளுதல்**
   - ✓ கதை எடுத்துரைக்கும் அறநெறிப் பண்புகள் குறித்த தங்கள் எண்ணங்களை / சிந்தனைகளை வெளிப்படுத்துதல்.

<u>**படிநிலைகள்**</u>

1. நீங்கள் ஏற்கெனவே வாசித்துக் காட்டிய **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையில் வரும் பிறந்தநாள் தொடர்பான சொற்களைச் சொல்லட்டைகளாகத் தயாரித்து வைத்துக்கொள்ளுங்கள்.

**எ-கா:**

- ஐந்து வயது
- பிறந்தநாள்
- பிறந்தநாள் வாழ்த்துகள்
- சமையல் அறை
- நண்பர்கள்
- வாழ்த்துச் சொன்னார்கள்




ஆசிரியர் அன்றைய பாடத்தைப் அறிமுகப்படுத்துதல்

2. நீங்கள் ஏற்கெனவே படித்த **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையைப் பிள்ளைகளிடம் நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.

3. பின், நீங்கள் **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையை வாசித்துக் காட்டுங்கள். உங்களைப் பின்தொடர்ந்து அக்கதையைப் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லுங்கள்.





ஆசிரியர் கதையைப் பிள்ளைகளிடம் வாசித்துக் காட்டுதல்

4. நீங்கள் பிள்ளைகளை **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையில் வரும் பிறந்தநாள் தொடர்பான சொற்களை நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.

5. நீங்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கும் **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையில் வரும் பிறந்தநாள் தொடர்பான சொல்லட்டைகளைப் பிள்ளைகளிடம் ஒவ்வொன்றாகக் காட்டி வாசித்துக்காட்டுங்கள்.



**ஆசிரியர் சொல்லட்டைகளைக் காட்டிச் சொற்களை வாசித்தல்**

6. உங்களைத் தொடர்ந்து பிள்ளைகளை அச்சொற்களை வாசிக்கச் சொல்லுங்கள்.

7. நீங்கள் சொல்லட்டைகளை ஒவ்வொன்றாகப் பிள்ளைகளிடம் காட்டுங்கள். பின்னர், அச்சொற்கள் **இன்பமான பிறந்தநாள்** என்னும் கதையில் இடம்பெறும் இடத்தைச் சுட்டிக்காட்டி வாசிக்கும்படி பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.

*****************************************